## தேவகோட்டை நகராட்சி.

**அவசரக்கூட்டம்.**

தேவகோட்டை நகராட்சியில் நகர்மன்ற அவசரக்கூட்டம் 24.01.2023–ம் தேதி செவ்வாய்கிழமை காலை 12.00 மணிக்கு அவசரக்கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்க்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. தாங்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்,
தேவகோட்டை நகர்மன்றம்.

**பொருள் – 200**

தேவகோட்டை நகராட்சி வார்டு எண்.01, தே. பிரிட்டோ மேல்நிலை பள்ளி கட்டிடத்திற்கு வரிவிதிப்பு எண்கள். 110/001/900939 மற்றும் 110/001/900940–ன்படி, வரிவிதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி வரி நிர்ணயம் செய்யப்பட்டதை எதிர்த்து மேற்படி பள்ளி நிர்வாகத்தால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP (MD) No.5837 of 2014 வழக்கு தொடரப்பட்டதில் 03.12.2018ல் தீர்ப்பு வழங்கப்பட்டது. மேற்கண்ட தீர்ப்பில் சம்மந்தப்பட்ட பள்ளி கட்டிடம் கல்வி நோக்கத்திற்காக எளிமைப் படுத்தப்பட்டதா அல்லது சுயநிதி படிப்புகளை நடத்துவதற்காக பயன்படுத்தப்பட்டதா என்பதை தீர்மானத்திற்குட்பட்டு நிவாரணம் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் நகராட்சி வழக்கறிஞரிடம் சட்டக்கருத்துரு பெறப்பட்டதில் தே பிரிட்டோ மேல்நிலைப்பள்ளி அரசு உதவி பெறும் பள்ளியென்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 83 (C)–ன்படியும் பிரிவு 83 (1) C–ன்படியும் தே. பிரிட்டோ மேல்நிலை பள்ளி அரசு உதவி பெறும் கல்வி நிறுவனம் என்பதால், கல்வி நோக்கத்திற்காக (Education Purpose) பயன்படுத்தப்படும் கட்டிடம் என நகர்மன்ற தீர்மானம் நிறைவேற்றி சொத்துவரி விதிப்பில் இருந்து விலக்கு அளிக்கலாம் என சட்டக்கருத்துரு வழங்கப்பட்டுள்ளது. எனவே வரிவிதிப்பு எண்.110/001/900939 நிலுவைத்தொகை ரூ.5,81,992/– மற்றும் வரிவிதிப்பு எண்.110/001/900940 நிலுவைத்தொகை ரூ.5,81,992/– ஆக, மொத்த தொகை ரூ.11,63,984/– முழுவதையும் 2022–2023ம் இரண்டாம் அரையாண்டு முடிய ரத்து செய்தும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 83 (C)–ன்படியும் பிரிவு 83 (1) C–ன்படியும், தமிழ்நாடு அரசிதழ் வெளியீட்டு எண்.33 நாள் 25.01.2018–ன்படியும், கல்வி நோக்கத்திற்காக கட்டிடம் பயன்படுத்தப்பட்டு வருவதால், கட்டிட வரிவிதிப்பில் இருந்து பொது விலக்கு அளிக்கப்பட்ட இனங்களின் கீழ் வருவதாலும் மேற்படி வரிவிதிப்பு எண்கள் மற்றும் அதற்கான நிலுவைத்தொகை ரூ.11,63,984/–யை, முழுமையும் ரத்து செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு –**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3294/2014/அ1**

நகர்மன்ற தலைவர்,
தேவகோட்டை நகர்மன்றம்.